# சுவிசில் திருமணம், கணவன் மனைவி

## தொடர்பான பெற்றோருக்கான தகவல்கள்



உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தையிட்டுச் சிந்திக்கிறீர்களா?
உங்கள் பிள்ளை எவருடனிணைந்து குடும்பத்தை அமைக்கவிருக்கிறது?

- சுவிசில் திருமணம், வாழ்க்கைத்துணை சம்பந்தமான தகவல்களை இங்கே பார்க்கலாம்.

# சுவிசில் சட்டப்படியான நிலைப்பாடு

தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி அமையவேண்டும் எனப் பெற்றோர்களுக்குப் பலதரப்பட்ட எண்ணங்கள் உள்ளன. இங்கு சுவிசில் அமுலிலுள்ள சட்டங்கள் கவனிக்கப்படவேண்டும். அவர்கள் பின்வருவரும் சட்டங்களை அமைத்துள்ளார்கள்:

- எப்போது, எவரைத்திருமணம் செய்து கொள்வது என்பதைச் சொந்தமாக முடிவு செய்வதற்குச் சகலருக்கும் உரிமையுண்டு.
- தாரமானது சொந்தவிருப்பிற் தெரிவு செய்யப்படவேண்டும். அப்படியில்லாத கட்டத்தில் அது செல்லுபடியாகாததொன்றாகும்.
- எவரையுமே திருமணத்திற்கு வற்புறுத்தக்கூடாது. அதற்கான அச்சுறுத்தல் 5 வருடங்கள் வரைக்குமான சிறைத்தண்டனையாகும்.
- குறைந்த வயதுத் திருமணங்கள் ஏற்கக் கூடியவையல்ல. இதை நீங்கள் வேற்று நாடுகளில் செய்தாலும் ஏற்றுக் கொள்ளமுடியாததொன்றாகும்.
- வற்புறுத்திச் செய்யப்பட்ட திருமணம் அல்லது குறைந்தவயதுத் திருமணத்தின் பின் அவர்களைச் சுவிசிற்குக் கூப்பிடுவது இயலாததொன்றாகும்.
- பெண்களுக்கும் ஆண்களுக்கும் எங்குமே சமமான உரிமையுண்டு
- எந்தப் பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ விவாகரத்துச் செய்வதற்கு உரிமையுண்டு.

«எனது மகன்மார் காதலித்துத் திருமணம் செய்வது முக்கியமானது.»

(டாவிடெ மனிஸ்காலோ, 45, சிசிலியன்)

«நான் பாரம்பரியத்திற்கு எதிரல்ல ஆனால் கட்டாயத் திருமணத்திற்கு எதிரானவர்.»

(செறிபான் அக்யில்டிஸ், 36, துருக்கி)

அன்பான பெற்றோர்களே

நீண்ட நாட்களின் பின்னர் உங்களுக்கு இக்கடிதத்தை எழுத மிகவும் கடினமாகவுள்ளது. எங்களது பிரிவினை என்னை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது மட்டுமல்ல பல தூக்கமற்ற இரவுகளைகளையும் உண்டாக்கியுள்ளது. கோபம், ஏமாற்றம் மற்றும் அக்கறை காரணமாக நீங்கள் தினமும் என்னைப்பற்றி நினைப்பீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் எனக்கு நல்லதையே செய்ய விரும்புகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நானும் உங்களை நன்கு நேசிக்கிறேன். ஆனால் நான் நேசிக்காத ஒரு ஆணை என்னாற் திருமணம் செய்து கொள்ளமுடியாது. செய்யவும் மாட்டேன்.

தயவுசெய்து என் மீது கோபம் கொள்ளாதீர்கள். நீங்கள் எனது பிள்ளைப்பராயத்தையும் இளம்பராயத்தையும் வழிநடத்தினீர்கள். இப்போது எனது பாதையை நானே அமைக்கவேண்டும். இப்பாதையைச் சிலவேளைகளில் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் எப்போதோ ஒரு நாள் என்னையிட்டுப் பெருமையடைவீர்கள் என்பதை உறுதியாக உங்களுக்குக் கூறுகிறேன். நாம் ஒரு நாள் மனக்கசப்பின்றிச் சந்தோசமாக இணைய வேண்டுமென ஆழமாக வேண்டிக் கொள்கிறேன். எனக்குத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் நீங்களே எனது பெற்றோராக வருவதையே விரும்புவேன்.

உங்கள் அன்பு மகள்

«எனது மகள் தானே தெரிவு செய்கிறாள்
அது எனக்கு முக்கியம்.»

(எம். கசான் ரகிமிபார், 59, ஈரான்)

# ஆலோசனை

மேலதிக தகவல்களை அல்லது இவை சம்பந்தமான உரையாடலைப் பெற்றுக் கொள்ளப் பின்வரும் மையங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

## ஆலோசனை நிலையங்கள்

- www.zwangsheirat.ch, Tel: 021 540 00 00
  info@zwangsheirat.ch
- Basel-Stadt: GGG Ausländerberatung
  Tel: 061 206 92 22, www.ggg-ab.ch
- Baselland: Ausländerdienst / ald
  Tel: 061 827 99 00, www.ald-bl.ch
- Beratungsstelle für binationale Paare und Familien
  Tel: 061 271 33 49, www.binational-bs.ch
- Opferhilfe beider Basel, Tel: 061 205 09 10
  www.opferhilfe-beiderbasel.ch

## குடும்பஆலோசனைநிலையங்கள்

- Basel-Stadt: Familien- Paar- und Erziehungsberatung
  Tel: 061 686 68 68, www.fabe.ch
- Baselland: www.fejb.ch இன் கீழ் முகவரிகளைப் பெறலாம்

## அவசரஅழைப்பு

- காவற்துறை: Tel: 117, www.polizei.ch

GGG Ausländerberatung

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
Bundesamt für Migration BFM

JACQUELINE SPENGLER STIFTUNG